IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No. 140 /2013

Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலாஜி | Caste | : - |
| Father's Name | : தாமோதரன் | Calling | : - |
| Village | : பில்லாந்திப்பட்டு கிராமம் | Religion | : இந்து |
| Taluk | : - | Age | : 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11 day of January , 2019.

Cross Examination

நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆதியம்மாள் பெயருக்கு உயில் எழுதப்பட்டதாக கூறும் உயில் செல்லாது என நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வேறு எதுவும் பரிகாரம் கேட்கவில்லையா என்றால் இல்லை. நான் சொத்து விவரம் காண்பித்துள்ளேன் என்றும் அது எந்த சொத்து என்றால் ராஜு மேஸ்திரி 1961-ல் வாங்கிய சொத்தின் விவரத்தை நான் காண்பித்துள்ளேன். ராஜுமேஸ்திரி என்று இறந்தார் என்றால் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ராஜுமேஸ்திரிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 ஆண்பிள்ளைகள். அவர்கள் பெயர் விவரங்கள் சாம்பசிவம், விஸ்வநாதன் மற்றும் தாமோதரன் ஆகியோர். ஆதியம்மாள் எனக்கு பெரியம்மா முறையாகும். ராஜுமேஸ்திரி எனக்கு தாத்தா முறையாகும். ராஜுமேஸ்திரியின் மகன் விஸ்வநாதனின் மனைவி தான் ஆதியம்மாள் என்றால் சரிதான். இந்த வாக்கு தாக்கல் செய்த சமயத்தில் சாம்பசிவம் உயிருடன் இருந்தாரா என்றால் இருந்தார் தற்பொழுதும் உயிருடன் உள்ளார். மேற்படி சாம்பசிவம் என்னுடன் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்தாரா என்றால் இல்லை. சாம்பசிவதிற்கு இந்த உயிலில் ஆட்சேபணையில்லையா என்றால் அது எனக்கு தெரியாது. வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

(Sd/-)..V.Vannamalar

DISTRICT MUNSIF

KATPAD I.